https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU ISSN: 2320 - 4842

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# கொங்கு நாட்டு கும்மி பாடல் - பண்பாட்டுப் பதிவுகள்

**கா. கிருத்திகா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
வேளாளர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு.

**Abstract**

There are many dialects served in the prosperous Kongunadu. The livelihoods of people based on agriculture are distinctive from others. The dialect and uniqueness is not only in speaking but also in singing and performing. 'Attam' (performance or dance) is considered unique from the Sangam period to the present. It comes naturally to living beings to move in the right verbal rhythm. 'Kummi' is one of the most important performing arts. Here people move their body and dance elegantly according to the rhythm. In 'Kummi' people make noise by clapping their hands, singing to the music and moving to the beat. An act with no age limit. 'Kummiyattam' is not only a training for the body but a happiness for the soul. Both the gender can perform this. The dance, which was commonly performed during Sangam times, is now being performed in rituals and ceremonies. Folk performing arts are often characterized by regionalism. Scholars have formulated a grammar for Kummi songs. In literature, the 'Yappamaithi' and 'Osainayam' of 'kummi' are defined to distinguish them from the types of 'Yappu' such as 'Vridtam' and 'Asiriyam'. Kummiyattam is divided into two types.

'Kummiattam' is called by different names. These names vary from region to region. Verbal idioms are used in the lyrics. The lyrics are also concerned with the events of the period. 'Kummiaatam' is now being taught and played by a group of instructors in Kongu region. Recently 'Vallikummi' is being performed a lot. In some of the art groups 'Vallikummi' is beingtrained. This song captures the story of Lord Murugan marrying Valli. The dancers move their hands and legs according to the rhythm of the song.

They dance in a row. On the one hand people are getting to know about Vallikummi. On the other hand, various 'Kummi' is just being stopped at regional level like many performing arts. There is a lot of punctuation in the lyrics as well. Efforts are also underway to restore all the performances at various sites. They are recorded and performed with the help of technology.

**ஆய்வுச் சுருக்கம்**

எழில்மிகு கொங்குநாட்டில் பரிமாறப்படும் வழக்காறுகள் ஏராளம். வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட மக்களின் வழக்காறுகள் மற்றவர்களிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டுவனவாக உள்ளன. வழக்காறுகள் பேசுவதில் மட்டுமில்லை பாடுவதிலும், நிகழ்த்து வதிலும் உள்ளது. சங்க காலம் தொடங்கி தற்போதுவரை நிகழ்த்துவதில் ஆட்டம் என்பது தனித்துவமானது. சரியான வாய்மொழிச் சந்த நடைக்கேற்ப அசைந்தாடுவது என்பது இயல்பாகவே உயிரினங்களுக்கு வருவதுண்டு. அப்படிப்பட்ட நிகழ்த்து கலைகளில் முக்கியமான ஒன்று கும்மி. நாவசைவும் உடலசைவும் நேர்த்தியான ஒன்று. கைகளால் தட்டி இசையை எழுப்பி இசைக்கு ஏற்ப பாடலும்பாடி மெட்டுக்கு ஏற்ப அசைந்தாடும் தகைமை கும்மிக்கு உண்டு. வயது வரம்பு கிடையாத ஆட்டம். உடலுக்குப் பயிற்சியையும் உள்ளத்திற்கு மகிழ்ச்சியையும் தரவல்லது கும்மியாட்டம். இவ்வாட்டம் இருபாலரும் ஆடுவர். சங்க காலங்களில் பொழுபோக்காக நிகழ்த்தப்பட்ட ஆட்டம் தற்போது சடங்குகளிலும்,

விழாக்களிலும் நிகழ்த்தப்பட்டு வருகிறது. நாட்டுப்புற நிகழ்த்து கலைகள் பெரும்பாலும் வட்டாரத்தன்மை கொண்டவையாக விளங்குகின்றன. கும்மிபாடல்களுக்கென அறிஞர்கள் இலக்கணம் வகுத்துள்ளனர். எழுத்திலக்கியத்தில் விருத்தம், ஆசிரியம் போன்ற யாப்பு வகைகளில் இருந்து வேறுபடுத்துகின்ற வகையில் கும்மியினுடைய யாப்பமைதியும், ஓசை நயமும் வரையறுக்கப்பட்டுள்ளன. கும்மியாட்டம் இருவகைகளாகப் பிரித்து ஆடுகின்றனர். கும்மி ஆட்டத்திற்கு பல்வேறு பெயர்களைக் கூறுகின்றனர். இவை வட்டாரத்திற்கு வட்டாரம் மாறுபடுகின்றது. பாடல் வரிகளில் வாய்மொழி வழக்காறுகளை அன்றைய காலகட்டத்தின் நிகழ்வுகளையும் பொறுத்திப்பாடுகின்றனர். கும்மி ஆட்டம் தற்போது குழுவாக பயிற்றுநர் கற்றுத்தந்து ஆடுகின்றனர். கொங்கு வட்டாரத்தில் சமீப காலத்தில் 'வள்ளிகும்மி' அதிகமாக ஆடப்பட்டு வருகிறது. கலைக்குழுக்கள் சில வள்ளிக்கும்மியை பயிற்றுவிக்கின்றனர். முருகன், வள்ளியை கரம்பிடிக்க நிகழ்த்தப்பட்ட கதையை பாடல் வரிகளில் மெட்டமைத்து கால் அசைவு, கை அசைவு வைத்து வரிசையாக ஆடுகின்றனர். ஒருபுறம் வள்ளிக்கும்மி பற்றி மக்கள் அறிந்துகொண்டு வந்தாலும் மறுபுறம் பல்வேறு கும்மிப் பாடல்கள் மலிந்து கொண்டு வருகின்றன. பல நிகழ்த்துகலைகளும் அந்தந்த வட்டார அளவிலே நின்று விடுகின்றன. பாடல்வரிகளிலும் பாடபேதம் அதிகம் உள்ளது. நிகழ்த்துக்கலைகள் அனைத்தும் பல்வேறு தளங்களில் மீட்டெக்கும் முயற்சியும் நடந்து கொண்டு வருகிறது. தொழில்நுட்பத்தின் உதவியோடு அவற்றை பதிவு செய்து அவை நிகழ்த்தப்பட்டும் வருகிறது.

## முன்னுரை

கிழக்கு வெளுத்து சேவல் கூவுவதற்கு முன் ஏர் பிடித்து நிலத்தைப் பண்படுத்தி உழவோட்டி வெள்ளாமை செய்து அந்தி சாயும் வேளையில் கூடியிருந்து குழும்மி கள்ளுண்டு களித்து பாட்டிசைத்து, உடலசைந்து களப்பைப் போக்கி உள்ளங்குளிர்ந்து மகிழ்ந்து ஆனந்தக் கூத்தாடி மக்கள் நோயின்றி வாழ்ந்து வந்தனர். சங்க காலம் தொடங்கி தற்போது வரை மகிழ்ந்து வாழ பலவழிகள் இருந்தாலும் ஆட்டம், பாட்டம் என்றாலே உள்ளூர உணர்வுகள் குதித்து ஆடஆரம்பிக்கின்றன. வாய்மொழி வழக்காறுகளை இசை அமைத்து ஆடிப்பாடி மகிழும் வழக்காறும் சங்க இலக்கியங்களில் இருந்தே நமக்கு கிடைக்கிறது. இவற்றை "நிகழ்த்துக் கலைகள்" என்கின்றனர் அறிஞர்கள். இக் கலைகள் சடங்குகளிலும் இடம்பெற்று அக் காலப் பண்பாட்டை தன் பாடல்களில் பதிவுசெய்து வருவதை இக்கட்டுரையில் காண்போம்.

நாட்டுப்புற நிகழ்த்து கலைகள் என்னும் சொற்றொடர் "FOLK PERFORMING ARTS" என்ற ஆங்கிலச் சொற்றொடருக்கு ஈடாகத் தமிழில் பயன்படுத்தப்படுகிறது. இதில் உள்ள விரிந்த பொருளுடைய 'நிகழ்த்துதல்' என்ற சொல்லின் பொருளை ஏனைய சொற்கள் குவித்துச் சுருக்கின்றன. நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகள் பெரும்பாலும் வட்டாரத் தன்மை கொண்டவை. ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொரு நிகழ்த்து கலைகள் செல்வாக்கு பெற்றிருக்கும். அவை அவ்வப்பகுதி மக்களால் பாட்டு படித்தல், வேஷம், ஆட்டம், கூத்து, நாடகம் என்ற பெயர்களால் சுட்டப்படும். இவையனைத்தையும் ஒரு வார்த்தைக்குள் அடக்கி 'கிராமியக் கலைகள்' என்று வழங்குகின்றனர்.

கொங்கு நாட்டில் நிகழ்த்தப்படும் நிகழ்த்துக் கலைகளாகத் தாலாட்டு. ஒப்பாரி, விடுகதைப் பாடல்கள், பழமொழிப் பாடல்கள், நாட்டுப்புற பாடல்கள், கதைப்பாடல்கள், கொலைச் சிந்து, தப்பாட்டம், ஒயிலாட்டம், கும்மியாட்டம், தேவராட்டம், சலங்கையாட்டம், காவடியாட்டம், கரகாட்டம், குறவன் குறத்தி ஆட்டம் மற்றும் தெருக்கூத்து போன்றவை விளங்குகின்றன.

## கும்மி இலக்கணம்

கும்மி பாடல்களுக்கு என இலக்கணம் வரையறுத்துள்ளனர். எழுத்திலக்கியத்தில் பயன்படுத்தப்படுகின்ற விருத்தம், ஆசிரியம் போன்ற யாப்பு வகைகளில் இருந்து கும்மிப்பாடல்களை வேறுபடுத்தும் வகையில் கும்மி யாப்பமைதியால் அதன் ஓசைநயம் வரையறுக்கப்பட்டுள்ளது.

கும்மி பாடல்களுக்கான இலக்கணங்களைப் பல்வேறு அறிஞர்கள் வகைப்படுத்தியுள்ளனர்.

**ஏ.என்.பெருமாள் அவர்களின் கூற்று "பெண்கள் கூட்டமாக கூடி இன்ப உணர்வைப்**

**புலப்படுத்தும் பாங்கில் கைக் கொட்டிக் களிந்து கதைப்பாடல்களைச் சமய, சமூக விழாக்களில் சுவை ததும்பப் பாடியும், கலை சிறக்க ஆடியும், பிறரை மகிழ்விப்பது கும்மியாட்டம்** *(சண்முகசுந்தரம். சு, தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள் ப.103)* என்கிறார் சண்முகசுந்தரம்.

பாரதியார் 'விடுதலைக் கும்மி' தலைப்பில்,

**"வட்டமிட்டு பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்**
**கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்"** *(பாரதியார், பாரதியார் கவிதைகள், ப. 92)* எனப் பாடியுள்ளார். மேலும்,

**"பெண்கள் பலர் கூடி இணைந்துதம் இன்ப உணர்வைப்**
**புலப்படுத்தும் பாங்கின் பல பொருள் குறித்துப் பாடி, கைகொட்டி,**
**ஆடி மகிழ்வதோடு பிறரையும் மகிழ்விப்பர்"**
*(கலைக்களஞ்சியம் தொகுதி – 4, ப.37)*

எனக் கும்மிக்குக் கலைக்களஞ்சியம் விளக்கம் தருகிறது.

ஒயிற்கும்மி, இயற்கும்மிக்கு புலவர் குழந்தை, அ.கி.பரந்தாமனார்,இரா.திருமுருகன், மீ.அ.மு. நாசீர் அலி போன்ற பல்வேறு அறிஞர்கள் விளக்கம் கூறியுள்ளனர். ஓரடிக் கும்மி, இரட்டைக் கும்மி, ஒயிற்கும்மி என அடிவரையறைக் குறித்தும் குறிப்பிட்டு ள்ளனர்.

## இலக்கியங்கள் சுட்டும் கும்மி

**"நோயுற்ற பெருமையுடையாருங் கூற்றம்**
**புறங்கொம்மை கொட்டினார் இல்"**
*(பழமொழி-291)*

**"குஞ்சரம் கூற்றொடு கொம்பை கொட்டுவர்"**
*(சீவகசிந்தாமணி-2230)*

**"கூற்றதைக் கொம்மை கொட்டிக்**
**குலத்தொடு முடியுமெல்பார்"** *(நைடதம்)*

பழந்தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கிய த்திலும், சிலப்பதிகாரத்திலும் கும்மி பற்றிய குறிப்புகள் உள்ளன. சிற்றிலக்கிய வகைக ளான 96 வகைகளில் பிள்ளைத்தமிழ் இலக்கி யமும் கும்மியின் தோற்றுவாய்க்கு முக்கிய மானதொன்றாகக் காணப்படுகிறது. அதில் கூறப்பெற்ற பருவநிலைகளில் சப்பாணி பருவம் கைகளைத்தட்டுவது கும்மி ஆட்டத் தோடு சார்புடையதாக அமைந்துள்ளது. பாணி என்பது கை ஆகும். கையுடன் கைசேர்வது சப்பாணி ஆயிற்று என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

எழுத்திலக்கியங்களில் மட்டும் கும்மி பற்றிய பதிவுகள் இல்லை. குகை ஓவியங்களிலும் சில பதிவுகள் கிடைத்துள்ளன. கொங்கு நாட்டில் மேற்பகுதியில் வெள்ளருகம் பாளையம் என்னும் ஊரில் உள்ள மலையில் பழங்கால வரலாற்றுப் புகழ்பெற்ற குகை ஓவியங்கள் கிடைத்துள்ளன. அதில் ஏழு பெண்கள் கை கோர்த்து ஆடுவதுபோன்ற ஓர் ஓவியம் உள்ளது. கொங்கு நாட்டில் மிகத் தொன்மையான காலத்திலிருந்தே பெண்கள் வட்டமிட்டுக் கும்மி, குரவைக் கூத்து ஆடும் வழக்கம் இருந்துள்ளதை இவ்வோவியங்கள் மூலம் அறியமுடிகிறது.

## கும்மிக்கான வேறுபெயர்கள்

கும்மிக்கான வழக்குச் சொற்கள் வட்டா ரத்திற்கு வட்டாரம் மாறுபட்டு வழங்கப் படுகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் முளைப்பாரிச் சடங்கில் கும்மியடித்தலை 'மொளக் கொட்டுதல்' என்று கூறுகின்றனர். விழுப்புரம் மாவட்டத்தில் 'தட்டியாங் கொட்டுதல்', 'கொண்டான் கொட்டுதல்' , 'நன்னன்னா கொட்டுதல்' என பல்வேறு பெயர்களில் வழங்கப்படுகின்றன. கொங்கு நாட்டு நாட்டுப்புற வழக்கில் தத்திக்கா தட்டுதல், கொம்மாயி தட்டுதல் போன்ற பெயர்கள் வழங்கப்படுகின்றன.

பாலினப் பாகுபாடு அடிப்படையில் கும்மியை இருவகைகளாக வகைப்படுத்த லாம். பெண்கள் கொட்டுவதை 'இயற்கும்மி' என்றும், ஆண்கள் கொட்டுவதனை 'ஒயிற் கும்மி' என்றும் குறிப்பர். பெண்கள் வட்ட மாக நின்று கைகளைக்கொட்டி வாய்மொழி யாகபயாகம் பாடுவது இயற்கும்மி. ஆண்கள் வட்டமாகவும், இரு வரிசையாகவும் நின்று அடிப்பது ஒயிற்கும்மி ஆகும். புராணங்கள், வரலாறுகள், வாழ்வியல் நிகழ்வுகள் போன்ற பொருண்மைகளபைகளை அடிப்படையாகக் கொண்டு,

* **வள்ளியம்மைக் கும்மி-ஞானக் கும்மி**
* **சாஸ்திரக் கும்மி-சமயக் கும்மி பாடல்கள்**
* **அரிச்சந்திரக் கும்மி**
* **நளன் கும்மி-புராணக் கும்மி**
* **பெண்கள் விடுதலைக் கும்மி**
* **அகத்தியர் வைத்தியக் கும்மி-வாழ்வியல் கும்மி**
* **கட்டபொம்மன் கும்மி**

* சிவகங்கைச் சரித்திரக் கும்மி-வரலாற்றுக் கும்மி

என தற்போது கும்மி நிகழ்த்தப்படுகிறது.

கால்களில் சலங்கைக் கட்டிக் கொண்டு ஒருவருக்கொருவர் இடைவெளி விட்டு ஒயிற் கும்மி ஆடுவர்.

"சிறகை விரித்தால் மயிலாட்டம்
சேர்ந்து குதித்தால் ஓயிலாட்டம்
சீறிப்பாய்ந்தால் புலியாட்டம்
திரையில் மறைந்தால் நிழலாட்டம்
கோஷ்டிகள் சேர்ந்தால் வாலாட்டம்
குழப்பம் வந்தால் போராட்டம்
திருடர்கள் ஆட்டம் நரி ஆட்டம்
சேஷ்டைகள் மிகுந்தால் குரங்காட்டம்

(தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், பக்.190 – 191)

என்பது ஒரு நாட்டுப்புறப் பாடல் என்று சோமலே குறிப்பிடுகிறார்.

கும்மியாட்ட அசைவுகள் ஆடுவரிடையே களைப்பு ஏற்படுவதை குறைக்கும் விதமாகவே ஆடப்படும் என்பதை,

"வலக்கால் முன் வைத்தல், குனிதல்

இருகைகள் கொட்டுதல்
இடக்கால் வலக்காலை ஒட்டி
பக்க வாட்டில் நகர்தல்
நிமிர்ந்து வலக்கால் பின்விரல்
கைகள் இயல்பு நிலைக்கு வரல்

(சண்முகசுந்தரம்.சு, தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள், ப.104) என்ற பாடல் மூலம் அறிய முடிகின்றது

கும்மிப்பாடல்கள் நிலாப்பிள்ளை வழிபாடு களிலும், கோயில் திருவிழாக்களிலும், சமய மற்றும் பிற சடங்கு நிகழ்வுகளிலும் பாடப்பட்டு ஆடப்பட்டு வருகிறது. ஆரம்ப காலங்களில் வயல்களில் வேலை பார்க்கும் பெண்கள் களைப்பு தெரியாமல் இருக்க கும்மிப் பாடல்களைப் பாடி வேலை செய்வர். இக்கும்மிப்பாடல்கள் கேலி, கிண்டல் கலந்த அறிவுரையாகவும் பாடப் படுகின்றது.

சேவற்பாட்டு

"சாவலின்னா சாவல் சின்னரங்கஞ் சாவல்

என் சாவல் போனவீடோ எனக்குத்
தெரியாது எனக்குத் தெரியாது
எந்தன் துரைரங்கசாமி வந்தா என்ன
சொல்லுவாரோ
சாவல் வந்தா நான் பொளைப்பேன்..."

திருடுபோன தன் சேவலை பணியாள் தேடும் இப்பாடல் கும்மிப்பாடல் மெட்டில் அமைந்துள்ளது .

"நன்னனே நன்னனே நன்னானே

நானே நன்னனே நன்னானே

குப்பையில் மேய்ஞ்சு வரும் குண்டு மணிசேவல்.."

வேளாண்மைப் பாடல்கள்

நன்னானே நன்னானே நன்னானே
நன்னானே
நான நன்னானே நன்னானே
ஆத்தோரம் லேலேலோ கொடிக்காலாம்
அரும்பரும்பா லேலேலோ வெத்தலையாம்
பொறிப்பாரு லேலேலோ இல்லாமே"

என வேளாண்மைச் சார்ந்தும் கும்மிப் பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன.

காதற் கும்மிப்பாடல்

பச்சைப் பொடவகட்டி ஏலேலோ கும்மி
ஏலேலோ
இங்கு நெல்லறுக்க போறபுள்ள ஏலேலோ
கும்மி ஏலேலோ
நின்னு கொஞ்சம் பேசிபுட்டா ஏலேலோ
கும்மி ஏலேலோ"

தைப்பூசப் பாடல்

ஆறுதப்பு ஏலேலோ நூறுபிழை
அடியார்கள் ஏலேலோ செய்ததெல்லாம்
கோடிதப்பு ஏலேலோ நூறுபிழை
குழந்தை நாங்கோ ஏலேலோ
செய்ததெல்லாம்
ஆதரித்து ஏலேலோ ரட்சிப்பாய்"

முருகன் பாடல்கள் தன்னை மன்னித்து ஆதரிக்கவேண்டும் விதமாக அமைந்துள்ளன.

ஒயிற்கும்மி

"ஏழை எளியவரே! எதிர்கால வாலிபரே
பாடுபடும் பாமலரைப் பாருங்கோ – எங்க
பாட்டக் கொஞ்சம் காது குளிரக் கேளுங்க!
தாம் தைய
தன்னே நன்னே நானே நன்னே"

அம்மன் வழிபாடுகளில் கும்மிப் பாடல்கள்

"மாதங்கள் மாரி பொழிந்திடுமாம்! – அம்மா!
மானாத செந்நெல் செழித்திடுமாம்
வேதங்கள் ஓதிடும் வேதியர்க்கு முன்னால்
அம்மன் வருவதைப் பாருங்கடி

தந்தினத்தானே தனத்தான – அம்மா!
தந்தினத்தான தனத்தான!"
"நன்னானே நன்னானே நன்னானே நன்னானே
நன்னானே நன்னானே நன்னானே
பத்துநம்போ லேலேலோ தண்ணிவரோ லேலேலோ
அடுக்கரளி லேலேலோ மேலவரோ
அடுக்கரளி லேலேலோ பூவெடுத்து
சாமிக்கு லேலேலோ சாத்திடுவோம்"

தத்திங்கா பாடல் (நிலாப்பிள்ளை வழிபாட்டு பாடல்)

"தத்திகா தத்திகா தைப்பொறந்தா தத்திகா
தத்திங்காப் பொண்டாட்டி எப்படிப்பட்டது
மாடு நெரஞ்சவ மருதகிரி பூண்டது
தேளி நெரஞ்சவ துளசிமணிப் பூண்டது"

பொழுதுபோக்கு கும்மிப்பாடல்கள்

"அந்தமலை இந்தமலை மணி தில்லாலே
நடுவிலிருக்கும் சளூகோ மல மணி தில்லாலே
சருக மல காப்பிச்செடி மணி தில்லாலே
சேலத்திலே சாயம் வாங்கி மணி தில்லாலே
செவ்வந்திப்பூ சாயங்கட்டி மணி தில்லாலே"

வள்ளிப்பாட்டு

காடு வெட்டி கரை யொதுக்கி

காடு வனம் தொப்பலிட்டு
வேலி வெட்டி விறகு ஒதுக்கி
..........................
வள்ளியம்மா காவல் வச்சா
வளர்ந்திடுமாம் தினைப்புனம்"

கொங்கு மண்டலத்தில் தற்போது அதிகமாக பாடி ஆடப்படும் வள்ளிக்கும்மி பாடல் களில் முதலில் முருகனை வணங்கி பிழை களிலிருப்பின் பொறுப்பீர் என்று கூறி வள்ளிப்பாட்டை பாடுகின்றனர். முருகன் வள்ளியைத் திருமணம் செய்யும் நிகழ்வு களைப் பாடல்களாகப் பாடுகின்றனர்.

வர்ண முத்துச்சாமி சொல்ல வாசிப்போம் நாங்கள் சிறுவர்

தேக்கு மலைதிண்ணில் வாழும் தேவி வள்ளி தன் கதையை
பக்குவமாய் பாடுவதற்கு கொண்டேனம்மா
சொல்லுமிந்தக் கும்மி தண்ணில் சொற்குற்றம் இருந்தால்
சுப்ரமணியர் கதை ஆசிரியர்களே பொறுப்பீர்"

"வள்ளிக்கொடி நடுவே பெண் குழந்தை
துள்ளிய மூகிறதாம் – தில்லல்லே
புள்ளிமான் பார்த்து – வனந்தன்னில்
கள்ளமாய் ஓடினதாம் தில்லல்லே
பார் மடந்தை இவள் குழந்தைப்
பாதுகாத்திருந்தாள் – தில்லல்லே"

இவ்வாறு வள்ளியின் பிறப்பு தொடங்கி முருகனைத் திருமணம் செய்யும் நிகழ்வு வரை பாடல் வரிகளால் மெட்டு அமைத்துப் பாடி கும்மி கொட்டி மகிழ்கின்றனர்.

நிலாப்பிள்ளை பாடல்

தைப்பூச நாளில் ஏழு நாட்கள் விரதமிருந்து விநாயகர், முருகனைப் போற்றி பாடிப் படையலிட்டு கும்மி அடித்து இறைவனை வணங்குகின்றனர். ஏழாவது நாளில் பொங்கல் வைத்து படையலிட்டு கும்மிய டித்து தேர் இழுத்து விநாயகரை ஆற்றில் கரைப்பர்.

"வட்ட வட்ட புள்ளாரே
வாழாக்கா புள்ளாரே
வாய்க்கட்டி வகுத்தக்கட்டி
வளத்துடன் புள்ளாரே
வாய்க்காலு தன்னியிலே
வாரியுட்டா புள்ளாரே"

"தன்னே தன்னானே னான னன்னே னா... னா

தன்னே னானே னான னன்னே... னா...

சிவ கந்தருக்கு முன் பிறந்த தேவா...
நீ கட்டிக் கணபதியே வா... வா
தன்னே தன்னானே னான னன்னே னா... னா
தையா தன்னேனன்னே னான னன்னே
ஓ தானானே னான னன்னே...

வைரக்கும்மி வள்ளிக் கும்மி..."

இழவுக் கும்மி

"கடஞ்சோ பகலிலே அன்னே னானேனானே
நீங்க கத்திரிப்பூ மெத்தியிலே ஒன்னோன னேனானே
நீங்க காசவின்னு சாஞ்சவீகோ அன்னேனா னேனானே
நா காசி வீசிறிகொண்டு அன்னேனா னேனானே"

கும்மியும் – பண்பாட்டுப் பதிவுகளும்

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை தாளம் என்பது உடன் பயணிக்கிறது. தாளம்

தட்டுதல் என்பதை இருகை ஓசை தொடங்கி, இசைக்கருவிகள் தட்டுதல் வரை குறிப்பிடலாம். சோர்வாக இருக்கும் நேரத்தில் இசை கேட்டால் இயல்பாகவே மனிதன் புத்துணர்ச்சி ஆகிடுவான். சங்க காலத்தில் திணைப்பாகுபாட்டின் அடிப் படையில் மக்கள் குழுவாக வாழ்ந்தனர். அதன் எச்சங்களே இன்று சில நடை முறைகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகி ன்றன. அதில் கும்மியும் ஒன்று. வளமைச் சடங்குகளில் அதிகமாக கும்மி பாடப்பட்டு நிகழ்த்தப்படுகிறது. முளைப்பாரி, அம்மன் திருவிழா, பொங்கல் விழா, பூப்பு நீராட்டு, திருமணம் போன்ற நிகழ்வுகளில் கும்மிப் பாட்டு இடம்பெறுகிறது. இப்பாட்டுகள் வாய்மொழி இலக்கியங்களாகவே இருந்து வந்தது. இயல்பான மிக எளிய நடை, மெட்டுகள், ஆட்ட அசைவுகள் போன்ற வற்றின் காரணமாக எளிய மக்களும் புரிந்து கொண்டு சேர்ந்து பாடி ஆடுகின்றனர். பாடல் வரிகள், கிண்டல், கேலி, எதுகை, மோனை, சந்த அமைப்புடன் தெளிவாக இருக்கும். தான் செய்யும் வேலையில் உள்ள ஏற்ற இறக்கங்களை குறிப்பிட்டு பாடல் வரிகள் இருக்கும். சடங்குகள் என்னென்ன கடைப்பிடிக்கப்பட்டனவோ அதற்கெல்லாம் கும்மிப்பாட்டுப் பாடப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் அறியலாம். வளமைச் சடங்கில் மட்டும் இல்லாமல் இறப்பு வீட்டிலும் பாடப்படுகிறது. ஊரில் பெரிய குடும்பத்தார் இறந்தால் அவரின் பெருமை, நடை, உடை கூறி இழவுக்கும்மி அமையும்.

## முடிவுரை

கும்மிப்பாடல்கள் தமிழ்நாடு மட்டுமல்லாது மற்ற மாநிலங்களிலும் வேறு பெயர்களில் சிறு மாற்றத்துடன் நிகழ்த்தப்பட்டு வருகிறது. கிராமியக் கலைகளில் ஒன்றான இக்கலை அரிதாக உள்ளது. கொங்கு மண்டலத்தில் மட்டும் வள்ளிக்கும்மி குழுகலையாக வளர்ந்து கொண்டு வருகிறது. காலத்திற் கேற்ப கும்மிப்பாடல் வரிகள் மாறி உள்ளதைக் காணமுடிகிறது. எளியோரையும் ஆடிப்பாடி மகிழ வைப்பதுதான் 'கும்மி. நாட்டுப்புறக் கலைகளை மீட்டெடுக்கும் முயற்சியில் அரசும், மக்களும் தற்காலத் தில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## துணை நின்றவை

1. சண்முகசுந்தரம். சு, தமிழில் நாட்டுப்புற பாடல்கள், மணிவாசகர் பதிப்பகம், 8/7 சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 600108
2. பாரதியார், பாரதியார் கவிதைகள், கவிதா பப்ளிகேஷன், 8, மாசிலாமணி தெரு, பாண்டி பஜார், தி.நகர், சென்னை – 600 017
3. கலைக்களஞ்சியம், தொகுதி – 4, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை
4. சோமலே, தமிழ்நாட்டு மக்களின் மரபும், பண்பாடும், நேஷனல் புக் டிரஸ்ட், சென்னை.

## கள ஆய்வு

| வ. எண் | தகவலாளர் பெயர் | ஊர் | பாலினம் | வயது | கல்வி | தொழில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | நாகம்மாள் | சாணார் பாளைம் | பெண் | 69 | மூன்றாம் வகுப்பு | விவசாயம் |
| 2 | டி.எஸ்.மண் ணாதன் | வெள்ளித் திருப்பூர் | ஆண் | 62 | ஐந்தாம் வகுப்பு | சமையல் |
| 3 | வெங்கடாச லம் | கணபதி, கோவை | ஆண் | 54 | ஐந்தாம் வகுப்பு | கலைத் தொழில் |
| 4 | செல்லம்மா ள் | வெள்ளித் திருப்பூர் | பெண் | 66 | இல்லை | கூலி |